1. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

(ஊ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

2. அரசினர் சட்டமுன் வடிவுகள் — தொடர்ச்சி.

(ஆ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(எ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய, ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.''